**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 124/2021.**
**வழக்கு சாட்சி – அ.சா. 4 (பட்டியல் சாட்சி –4).**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. வசந்த். | ஜாதி | |
| தந்தை பெயர் | அய்யனார். | தொழில் | தனியார் நிறுவனத்தில் வேலை |
| கிராமம் | கோட்டூர். | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 31/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.03.2026.

**(எதிரி ஆஜரில்லை. அவருக்காக பிரிவு 355 B.N.S.S. –ன் கீழ் மனுத் தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**அரசுத் தரப்பு முதல் விசாரணை:–**

நான் தற்போது, கோட்டூரில் குடியிருந்துகொண்டு, மகளிர் சுய உதவிக் குழுவில் பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 என் மாமனார் ஆவார். அ.சா.2 என் மனைவி ஆவார். அ.சா.3 என் மனைவியின் தங்கை ஆவார். எதிரி எனது பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். எதிரி, எனது மாமியாரின் உறவினர் ஆவார். கடந்த 03.02.2024 ஆம் தேதியன்று என் மாமியார் பொன்மாரி துணி துவைத்துக்கொண்டிருந்தபோது, எங்கள் வீட்டிற்கு முன்பாக எதிரி ஜெகதீஸ்பாண்டியனின் தம்பி ஜெகவீரபாண்டியன் என்பவர் என் மமியாரை அடித்து, நெஞ்சில் உதைத்து, தகராறு செய்தார். அதில் என் மாமியார் சுயநினைவில்லாமல் சென்றுவிட்டார். நாங்கள் என் மாமியாரை வீரபாண்டி காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றோம், பின்னர் அங்கிருந்து வீரபாண்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றோம். எங்கள் வீட்டின் முன்பாக நிறுத்தியிருந்த TN 60 BZ 2986 என்ற பதிவெண் கொண்ட யமஹா எனது இருசக்கர வாகனத்தை ஜெகவீரபாண்டியன் அடித்து நொறுக்கி கீழே போட்டுவிட்டுவிட்டு, கையில் கத்தியுடன் உங்களைக் கொல்லாமல் விடமாட்டேன் எனக் கூறினார். அதன்பின்பு, எனது மனைவியின் தம்பி மற்றும் அவரது

நண்பர்கள் உடன் சென்று, ஜெகவீரபாண்டியன் வீட்டில் வைத்து ஜெகவீரபாண்டியனிடம் "ஏன் வண்டியை அடித்து நொறுக்கினாய் என்று கேட்டபோது, அங்கு ஜெகவீரபாண்டியன் அவரின் இரண்டு கைகளில் 2 கத்திகளை வைத்துக்கொண்டு, நீ இங்க வருவாய் என்று தெரியும் என்று கூறிக்கொண்டே, எனது மனைவியின் தம்பியின் நெஞ்சில் கத்தியை வைத்துக் குத்தினார். எனது மனைவியின் தம்பி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்ந்தார். நான் மற்றும் எனது குடும்பத்தினர் எனது வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தோம். கடந்த 04.02.2024 ஆம் தேதியன்று அதிகாலை சுமார் 05.00 மணியளவில் வெளியில் சத்தம்கேட்டு வெளிச்சமாக இருந்தது. நானும், என் மாமனார் அப்பா, என் மனைவியின் சகோதரி மற்றும் என் மனைவி ஆகியோர்கள் கதவைத் திறந்து வெளியே வந்து பார்த்தபோது, ஜெகதீஸ்பாண்டியன் என்பவர் கையில் வைத்திருந்த கேனில் இருந்த பெட்ரோலை மேற்படி யமஹா இருசக்கர வாகனத்தில் ஊற்றி தீ வைத்தார். எங்களைப் பார்த்ததும், எங்கள் வீட்டிற்கு முன்பிருந்த பாதை வழியாக ஓடிவிட்டார். நாங்கள் தீயினை அணைக்க முயற்சி செய்தோம். ஆனால் முடியவில்லை. அதற்குள் மேற்படி இருச்சகர வாகனம் எரிந்துவிட்டது. என் மாமனார் அன்று காலை 07.30 மணியளவில் வீரபாண்டி காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

(எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய, வாய்ப்பளித்தும், குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால், குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது).

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.03.30 19:06:35 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**